கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் ஏப்ரல் மாதம் 09ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.2/2019
இன்
அசல் வழக்கு எண்.245/2019
-----

1. நாராயணன்
2. மகாலிங்கம் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1. ஆதிலட்சுமி
2. பால்பாண்டி
3. பாண்டி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 04.04.2025–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமச்சிவாயம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மாதவன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன்

பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>உத்தரவு</u>

மனுதாரர்/வாதிகளின் அமைதியான அனுபவத்தினையும் சுவாதீனத்தினையும் இந்நிர் எதிர்மனுதாரர்களோ/பிரதிவாதிகளோ, அவர்களது முகவர்களோ மற்றும் அவர்களது வகையாட்களோ எந்த விதத்திலும் இடையூறும் செய்யக்கூடாது என்று ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மேலும் எதிர்மனுதாரர் தோன்ற நிலையில் இம்மனு மீது உத்தரவு பிறப்பிக்கும் வரை Ad-interm injunction வழங்கி உத்தரவு பிறப்பிக்ககோரியும், உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை</u> :-**

இந்த மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) மனுதாரர்/வாதிகளின் அமைதியான அனுபவத்தினையும் சுவாதீனத்தினையும் இந்நிர் எதிர்மனுதாரர்களோ/பிரதிவாதிகளோ, அவர்களது முகவர்களோ மற்றும் அவர்களது வகையாட்களோ எந்த

விதத்திலும் இடையூறும் செய்யக்கூடாது என்று ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மேலும் எதிர்மனுதாரர் தோன்ற நிலையில் இம்மனு மீது உத்தரவு பிறப்பிக்கும் வரை Ad-interm injunction வழங்கி உத்தரவு பிறப்பிக்ககோரியும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை இம்மனுவின் எதிருரையாக பாவித்து கொள்ளவேண்டி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>3) தீர்வு</u> :-**

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. கட்டளை 39 விதி 1, 2 CPC கீழ் மனுதாரர் நிவாரணம் பெற வேண்டும் என்றால்,

(i) மனுதாரரின் வழக்கிற்கு முதற்தோற்ற வழக்கு இருக்கவேண்டும்.

(ii) மேற்படி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம்

வழங்காவிட்டால் மனுதாரருக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்றும், Balance of convenience மனுதாரருக்கு ஆதரவாக உள்ளது என்று நிருபணம் செய்யவேண்டியது அவசியமானதாகும். ஆனால், இம்மனுவில் மேற்படியான நிபந்தனைகளை நிரூபணம் செய்யும் விதமாக மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

3.1) மேலும், அசல் வழக்கின் பரிகாரமானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமாக இருப்பதால், மேற்படி மனுவினை அனுமதிக்காததால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பணத்தால் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று நிரூபணம் செய்யாததாலும், அசல் வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும், இம்மனுவில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும் ஒன்றாக இருப்பதாலும், வழக்குச்சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதை முழு விசாரணைக்கு பின்பு தான் தீர்வு காண இயலும் என்பதாலும், மேற்படி காரணங்களை கருத்தில் கொண்டு இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள இடைக்கால தடையுறுத்தரவு கட்டளை பரிகாரம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 09.04.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.04.09 16:20:02 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**<u>இணைப்பு</u>**:-
**<u>மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:-

**- இல்லை -**

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.04.09 16:20:09 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.02/2019
இன்
அசல் வழக்கு எண்.245/2019
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 09.04.2025